தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள். 03.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.SA 10183/F/2024

திரு.வீ.இராஜ்குமார், -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது),
பருகூர் ஊராட்சி ஒன்றியம், -- பொது அதிகார அமைப்பு
கிருஷ்ணகிரி மாவட்டம்-635 104.

******

ஆணை

இவ்வாணையம் 22.09.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.ந.சு.டென்சிங், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), பருகூர் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம், அப்போதைய பொதுத் தகவல் அலுவலர், சொ.சுந்தர்ராஜ், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஊ), பருகூர் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம் (தற்போது துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது), ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலர் (ஓய்வு), பருகூர் ஊராட்சி ஒன்றியம், கிருஷ்ணகிரி மாவட்டம் ஆகியோர்கள் 03.11.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரை தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 2(j) (iii)-ன் படி களஆய்வுக்கு உட்படுத்தி, மனுதாரருக்கு உறுதிசான்றளிக்கப்பட்ட மாதிரிகளை பிரிவு 7(6)-ன்படி கட்டணமில்லாமல் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் அதனை களஆய்வு மேற்கொண்டதற்கான புகைப்படம் ஆகியவற்றினை

இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்கிறது. அதனை தொடர்ந்து, அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர், தான் கிருஷ்ணகிரி மாவட்டம், பருகூர் ஊராட்சி ஒன்றியம், ஒப்பதவாடி ஊராட்சியில் தெருவிளக்குகள் பழுதுபார்ப்பு பராமரிப்பு பொருட்கள் கொள்முதல் குறித்த மாதிரிகளை கள ஆய்வு செய்ய அனுமதி கோரி வரப்பெற்ற மனுவிற்கு பொதுத் தகவல் அலுவலர்/ துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), பருகூர் கடித ந.க.எண்.473/2024/இ3, நாள் 07.02.2024 கடிதத்தில் உதவி பொதுத் தகவல் அலுவலர்/ ஊராட்சி செயலாளர், ஒப்பதவாடி அவர்களுக்கு தெரிவித்துள்ளதாகவும், அதனை தொடர்ந்து வரப்பெற்ற மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனுவிற்கும் முதல் மேல்முறையீட்டு அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), என்ற முறையில் தான் தொடர் நடவடிக்கையாக கடித ந.க.எண்.473/2024/இ3, நாள் 09.07.2024-ன் படி ஒப்பதவாடி ஊராட்சியின் உதவி பொதுத் தகவல் அலுவலர்/ ஊராட்சி செயலருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 5(5)-ன் படி உரிய தகவல்களை உடனடியாக வழங்கிட தெரிவித்திருந்ததாகவும், ஆனால் உதவி பொதுத் தகவல் அலுவலர் உரிய காலத்திற்குள் தகவல்கள் தராமல் காலம் தாழ்த்தி வந்ததாகவும், இதனால் மனுதாரருக்கு உரிய காலத்தில் தகவல் வழங்க இயலாத நிலை ஏற்பட்டது என்றும், இது தன்னால் ஏற்பட்ட கால தாமதம் அல்ல என்றும், மேல்முறையீட்டு அலுவலராகிய தான் குறித்த காலத்திற்குள் தகவல் வழங்க உரிய நாளில் கடிதம் வைத்தும் உதவி பொதுத் தகவல் அலுவலர்/ ஊராட்சி செயலர் உரிய காலத்திற்குள் தகவல் வழங்க இயலாத நிலை ஏற்பட்டது என்று தெரிவித்து, தனது எழுத்துமூல விளக்கத்தினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பதிவு செய்து, அப்போதைய மேல்முறையீட்டு அலுவலரின் விளக்கத்தினை ஏற்கிறது. அதன் பின்னர் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் தனது எழுத்துமூல விளக்கத்தில் மனுதாரர் கோரிய தகவல்கள் ஒப்பதவாடி கிராம ஊராட்சியை சேர்ந்தது என்பதால் ஒப்பதவாடி கிராம ஊராட்சியின் உதவி பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் வழங்கும் பொருட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 5(5)-ன் கீழ் மனு கிடைக்கப்பெற்ற இரண்டு நாட்களுக்குள் கடிதம் அனுப்பப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது என்றும் இந்த நடவடிக்கையில் தன்னால் காலதாமதம் ஏதும் ஏற்படவில்லை என்று தெரிவித்து தனது எழுத்துமூல விளக்கத்தினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து ஏற்று, ஆணையம் கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

- ***மனுதாரரின் 10.12.2023 தேதியிட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு மற்றும் 25.05.2024 தேதியிட்ட முதல் மேல்முறையீட்டு மனு குறித்தும் தகவல்களை வழங்குமாறு ந.க.எண்.473/2024/இ3, நாள் 07.02.2024 மற்றும் 09.07.2024 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக உதவி பொதுத் தகவல் அலுவலர்/ ஊராட்சி செயலாளர், ஒப்பதவாடி ஊராட்சி ஒன்றியம், பருகூர், அவர்களுக்கு பொதுத் தகவல் அலுவலர் மற்றும் முதல் மேல்முறையீட்டு அலுவலரால் கடிதங்கள் அனுப்பப்பட்டும், தகவல்களை வழங்காத உதவிப் பொதுத் தகவல் அலுவலர் உதவி பொதுத் தகவல் அலுவலர்/ ஊராட்சி செயலாளர், ஒப்பதவாடி ஊராட்சி ஒன்றியம், பருகூர், அவர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையத்திற்கு***

16.12.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உதவிப் பொதுத் தகவல் அலுவலர்/ ஊராட்சி செயலாளர், ஒப்பதவாடி ஊராட்சி ஒன்றியம், பருகூர், அவர்களுக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. மேலும், அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் நேரில் முன் நேரில் ஆஜராகுமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண். SA 10183/F/2024</u>
பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது),
பருகூர் ஊராட்சி ஒன்றியம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்-635 104.

அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (10.12.2023 தேதிய),
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
பருகூர் ஊராட்சி ஒன்றியம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

அப்போதைய முதல் மேல்முறையீட்டு அலுவலர் (25.05.2024 தேதிய),
வட்டார வளர்ச்சி அலுவலர்,
பருகூர் ஊராட்சி ஒன்றியம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

உதவிப் பொதுத் தகவல் அலுவலர்/ (07.02.2024 (ம) 09.07.2024 தேதிய)
ஊராட்சி செயலாளர்,
ஒப்பதவாடி ஊராட்சி ஒன்றியம்,
பருகூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.

(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)

மனுதாரர்

திரு.வீ.இராஜ்குமார்,
5/333, கரடிகுட்டை தெரு பகுதி,
அங்கிநாயனப்பள்ளி கிராமம்,
8-வது வார்டு அங்கிநாயனப்பள்ளி அஞ்சல்,
ஒப்பதவாடி கிராமம்,
பருகூர் ஊராட்சி, கிருஷ்ணகிரி மாவட்டம்-635 104.

நகல்

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For followup).

Copy to: File NS/PA-

தகவல் அறியும் உரிமைச் JULIE 2005